**IN THE COURT OF III ADHOC JUDGE**

**City Civil Court Chennai -104**

**PW1:V.Lakshmi.** **OS. NO:5549/2023** **DATE:04.07.2026**

**குறுக்கு விசாரணை**

சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

நானும் பிரதிவாதியும் பக்கத்து வீட்டுகார்கள் மற்றும் உறவினர்கள் நான் தொழில் ஏதும் செய்யவில்லை வீட்டில் இருக்கிறேன். நான் பிரதிவாதிக்கு நிறையமுறை பணம் கொடுத்துள்ளேன். நான் எந்ததெந்த வருடம் பணம் கொடுத்தேன் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. நான் பிரதிவாதிக்கு மட்டும்தான் பணம் கடன் கொடுத்தேன் மற்றவர்களுக்கு கடன் கொடுக்கவில்லை. நான் கடைசியாக கொடுத்தபணத்திற்குதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் இதற்கு முன்பு கொடுத்த பணத்தை பிரதிவாதி திரும்பகொடுத்துவிட்டார். நான் 2 சதவீதம் வட்டிக்கு பணம் கொடுத்தேன். ExA2 ஆவணத்தில் மாதம் 4 சதவீத வட்டி என்று குறிபிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் நான் குறிபிட்டுள்ள அசல் தொகை 9 லட்சத்து பத்தாயிரம்ஆகும் எந்த தேதியில் இந்த பணத்தை கொடுத்தேன் என்றால் எனக்கு தேதி தெரியவில்லை. நான் இந்த தொகையை பணமாக தான்கொடுத்தேன். நான் 100 ரூ ,200 ரூ, மற்றும் 500 ரூ நோட்டு தாள்களாக கலந்து தான்கடன் கொடுக்கும்போது கொடுத்தேன் அப்போது பிரதிவாதி மட்டும்தான் இருந்தார். பிரதிவாதி என்னிடம்22.10.2018 அன்று 6 லட்சம் கடன் வாங்கினார் என்றும் அதற்கு மாதம் 4 சதவீதம் வட்டியுடன் 2019 ஆண்டு அசலையும் வட்டியும் கொடுத்து முடித்துவிட்டார் என்றால் சரியல்ல. மீண்டும் பிரதிவாதி மார்ச்2020 ல் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் 4 சதவீத வட்டிக்கு கடன் வாங்கினார் என்றும் அதற்கு நான் அவரிடம் பூர்த்திசெய்யப்படாத முத்தரைஒட்டிய வெள்ளைதாளில் கையொப்பமும், பூர்த்திசெய்யப்படாத stamp paper கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல.இதை தவிர பிரதிவாதி சரளாவின் அம்மாபெயரில் குடிசை மாற்று வாரியத்தால் சொத்தின்

அசல் உத்திரவையும் நான் பெற்றுகொண்டேன் என்றால் அவர்ராகவேதான் என்னிடம் கொடுத்தார். ExA2 ஆவணத்தில் 20.12.2020 தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. ExA2 ஆவணத்தில் ரூபாய் 9 லட்சத்து 10 ஆயிரத்திற்கு ரொக்க கடன் பத்திரம் மறு புதுபித்தல் என்று குறிபிடப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் இதற்கு முன் வாங்கிய கடனை புத்துபித்தல் செய்துள்ளேன். மேலும் இந்த பத்திரத்தில் சரளாவாகிய நான் மனப்பூர்மாக சம்மதித்து எழுதிகொடுத்த அக்கிரிமென்ட் என்று உள்ளது. ExA2 ஆவணத்தில் அடமானம் வைத்ததாகவும் கடனை திரும்ப கொடுக்காத பட்சத்தில் பிரதிவாதி அம்மாவின் பெயரில் உள்ள சொத்தை நான் எடுத்து கொள்ளவேண்டும் என்று உள்ளது. நான் கடனுக்கு பணம் கொடுத்தேனா அல்லது சொத்தை பெறுவதற்கு அக்ரிமென்ட் போட்டேனாஎன்றால் கடனுக்கு பணம் கொடுத்தேன். எனக்கு தனிநபர் வட்டிக்கு பணம் கொடுக்கும்போது எத்தனை சதவீதம் வரை வட்டிபெறலாம் என்ற விவரம் தெரியாது. பிரதிவாதி மார்ச்2020 ல் வாங்கிய 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயை 4 சதவீதம் வட்டியுடன் எனக்கு திரும்ப கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. ExA1 சரளா சார்பாக எழுதிக்கொடுத்ததால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் இதில் சாட்சி கையொப்பம் யாரும் போடவில்லை. சரளாவின் கையொப்பம் முத்திரையில் மட்டும்தான் உள்ளது முத்திரைக்கு வெளியேஇல்லை. பிரதிவாதி 2020 ல் வாங்கிய கடனை திரும்பசெலுத்திவிட்டு பிரதிவாதியிடம் நான் கையொப்பம் பெற்ற முத்தரைஒட்டிய வெற்று தாளிலும் வெற்று முத்திரைதாளையும் திரும்ப கேட்டபோது நான் கொடுக்க மறுத்து காலம் தாழ்த்தினேன் என்றால் சரியல்ல. ExA3 ஆவணம் நான் வழக்கு தாக்கல் செய்யும்முன்பு பணத்தை திரும்ப கேட்டு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பாகும். இதற்கு பிரதிவாதி 25.04.2023 அன்று என்னுடைய வழக்கறிஞர்க்கு பதில் அனுப்பினார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. இந்த பதில் அறிவிப்பு பிரதிவாதி 2018 ல் வாங்கிய கடனையும் அதை 2019 ல் திரும்பசெலுத்தியதையும் மீண்டும் 2020 ல் கடன்வாங்கியதையும் அதை திரும்பசெலுத்திவிட்டு நான் பெற்ற முத்திரைதாள்கள் மற்றும் குடிசை மாற்று வாரிய ஒதுக்கீட்டு உத்திரைவை பிரதிவாதி திரும்ப கேட்ட விவரத்தையும் குறிபிட்டுள்ளார்

என்றும் அந்த விவரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரியல்ல. இந்த அறிவிப்பபை நான் மறைத்து விட்டு நான் ஜுன் மாதம் 2023 ல் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் வீட்டுக்குடித்தனமாக இருக்கும்போது 9 லட்சத்து 10 ஆயிரம் கடன் கொடுத்த விவரத்தை வருமான வரி துறை கணக்கில் காட்டவில்லை. எனக்கு 9 லட்சத்து 10 ஆயிரம் ரூபாய் எப்படிவந்தது என்றால் என் அப்பாவிடம் கொஞ்ச தொகை பின் நகைகளை அடமானம் வைத்தேன், என் கணவர் மீததொகை கொடுத்தார்.என்அப்பாவிடம் பணம் பெற்றதற்கு ஆதாரமும், நகை அடானம் வைத்தற்கு ரசீதும், என்கணவரிடம் பணம்பெற்றதற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 4 சதவீதம் வட்டி வாங்குவது சட்டபடி தவறு என்பது எனக்கு தெரியாது ஆனால் நான் வட்டிவாங்கவில்லை. பிரதிவாதி என்னிடம் வாங்கிய பணம் முழுவதும் கொடுத்துவிட்டார் என்றும் நான் மார்ச்2023 ல் பிரதிவாதியிடம் வாங்கிய பத்திரங்கள் காலவதிஆகிவிட்டன என்றும் மீண்டும் கையொப்பம் வேண்டும் என் கேட்டு தொந்தரவு செய்தேன் என்றால் சரியல்ல. இதுசம்மந்தமாக பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் இல்லை. நான்28.09.2023 ல் நான் கோட்டூர்புரம் காவல் நிலையம் சென்றேன் என்றால்இல்லை நான் காவல் நிலையம் சென்று ஆவணங்களை திரும்பகொடுத்துவிடுவதாகவும் பிரதிவாதியை தொந்தரவு செய்யமாட்டேன் என்று எழுதிகொடுத்துவிட்டு வந்தேன் என்றால் சரியல்ல.ExA1 ஆவணத்தில் முத்திரையின் மீது R. சரளா என்கிற கையொப்பம் உள்ளது. ExA2 ஆவணத்தில் R என்கிற initial இல்லை ExA1 ஆவணத்தில் சரளா என்ற கையொப்பமும் ExA2 ஆவணத்தில் உள்ள சரளா என்ற கையொப்பமும் வேறுவேறாக உள்ளது என்றால் அவ்வாறு இல்லை, ExA2 ஆவணத்தில் வலது ஓரத்தில் இருப்பது என்னுடைய கையெழுத்துதான். ExA2 ஆவணத்தில் 2 ம்பக்கம் இறுதியில் சுகன்யா என்று கையொப்பம்மிட்டிருப்பது சரளாவின் மகள் ஆவார். ExA2 ஆவணத்தில் 20.03.2019 ல் ரொக்கம் கொடுக்கப்பட்டு பெறப்பட்டுள்ளது என்று உள்ளது. நான் பிராதில் குறிபிட்டுள்ளபடி 07.12.2020 ல் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும் ExA2 ஆவணத்தில் குறிபிட்டுள்ளபடி

20.03.2019 ல் 9 லட்சத்து 10 ஆயிரம்  ரூபாய் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, ExA2 கையொப்பம் மற்றும் கைரேகைகள் ராதா , சரளா, சுகன்யா ஆகியோர்உடையது என்றால் சரியல்ல. ExA1 ஆவணததில் உள்ள revenu முத்திரை அந்த ஆவணத்தில் ஒட்டப்பட்டது அல்ல என்றும் முன்பு நான் கையொப்பத்துடன் வாங்கிவைத்திருந்த முத்திரையை இந்த ஆவணத்தில் ஒட்டி  இந்த ஆவணத்தை தயார்செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த கடன்தொகையும் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும் நான் பொய்யாக ஆவணங்களை தயார்செய்து பிரதிவாதியிடம் பணம் பரிக்கவேண்டும் எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் பெற்ற கையொப்பம் பெற்ற அசல் முத்திரையிட்ட வெத்து தாள்களை திரும்பகொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவுதொகையுடன் தள்ளுபடிக்கு லாய்க்குஆனது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**